அரச நிர்வாகம், உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சு

# உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம்

# வெற்றிடங்களுக்காக விண்ணப்பம் கோரல்

நாட்டிலுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களில் மூலதன முதலீடுகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்குத் தேவையான கடன் வசதிகளை வழங்குதல் மற்றும் கடனை மீளப் பெறும் பிரதான கடமைகளை நிறைவேற்றும் தேசிய கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம் 1916ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள நியதிகள் சட்ட நிறுவனமாகும் என்பதுடன் இந்த நிதியம் அரச நிர்வாகம், உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சினால் நிர்வகிக்கப்படுகின்றது. இந்த நிறுவனத்தின் பின்வரும் பதவி வெற்றிடத்திற்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## சாரதி
## (வெற்றிடங்களின் எண்ணிக்கை - 01)

01. **சேவை வகுதி:**

''ஆரம்பம் - தேர்ச்சிபெற்ற''

02. **சேவை வகுதிக்கு ஒப்படைக்கப்படும் கடமைகளின் தன்மை தொடர்பான பொதுவான வரையறை:-**

நிறுவனத்தினால் ஒப்படைக்கப்படும் கடமைகளை நிறைவேற்றுதல் மற்றும் பேணிக் கொண்டு செல்வதற்கான அடிப்படைத் தேவைப்பாடுகளான நிர்மாணம், பராமரிப்பு, திருத்தவேலைகள், ஒளியேற்றுதல் போன்ற அடிப்படை வேலைகளுக்கிடையில் மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் விதிக்கப்பட்டுள்ள வகையில் தேசிய தொழிற்றிறன் (N.V.Q) நான்காம் (4) மட்டத்தில் தொழிற் பயிற்சி சான்றிதழ் / தேர்ச்சிச் சான்றிதழ் ஊடாக உறுதிப்படுத்தப்படும் தொழில்நுட்ப / கைவினை / தொழில் திறன்கள் தேவையான வேலைகள் ஒப்படைக்கப்படும் நபரிடமிருந்து மற்றும் போக்குவரத்து வேலைகளின் போது தேவைப்படும், மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட மோட்டார் வாகன சாரதி உரிமத்தைக் கொண்ட நபரிடமிருந்தான சேவை வகுதி.

03. **தகைமைகள்:**

***வெளிவாரி விண்ணப்பதாரிகள்***

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் குறைந்தபட்சம் இரண்டு (02) திறமைச் சித்திகள் சகிதம் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

மற்றும்

**தேர்ச்சி:**

மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட கனரக வாகனம் செலுத்துவதற்கான மோட்டார் வாகன சாரதி உரிமத்தைப் பெற்றிருத்தல் மற்றும் சாரதி உரிமத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் வாகனம் செலுத்துதல் தொடர்பில் குறைந்தபட்சம் மூன்று (03) வருடகால அனுபவத்தைப் பெற்றிருத்தல்

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட கனரக வாகனம் செலுத்துவதற்கான மோட்டார் வாகன சாரதி உரிமத்தைப் பெற்றிருத்தல் மற்றும் சாரதி உரிமத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் வாகனம் செலுத்துதல் தொடர்பில் குறைந்தபட்சம் மூன்று (03) வருடகால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

ஆரம்ப தேர்ச்சியற்ற (PL 1) சேவை வகுதியில் ஐந்து (05) வருடங்கள் திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

04. **வயதெல்லை:**

18 வயதிற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும் என்பதுடன் 45 வயதிற்கு மேற்படாதிருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

இந்தப் பதவி முகாமைத்துவ சேவை பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதி அளிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட பதவியாகும்.

சேவை வகுதிக்கு இயைபான சங்கேத இலக்கம் மற்றும் மாதாந்த சம்பள அளவு 2025-01-01ஆம் திகதி முதல்,

**PL 3 : ரூபா ( 43,280 - 10x490 - 10x540 - 10x590 - 12x630 - 67,040)**
**(அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் சேர்க்கப்படும்)**

பிரதான அலுவலகத்தின் தேவைப்பாட்டிற்காக ஆட்சேர்க்கப்படுவதால் அருகாமையில் வசிக்கும் விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை உரித்தாகும்.

ஆட்சேர்ப்புகள் நேர்முகத் தேர்வின் மூலம் மேற்கொள்ளப்படும்.

**சேவை நிபந்தனைகள்:**

i. இந்தப் பதவிகள் நிரந்தரமானவை என்பதுடன் 03 வருட கால தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது.

ii. ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ஊழியரினால் சம்பளத்தின் 8% செலுத்துதல் வேண்டும் என்பதுடன் தொழில் வழங்குநரினால் 12% மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு 3% செலுத்தப்படும்.

விண்ணப்பப் படிவங்களை பிரதான நிறைவேற்று அதிகாரி, உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம், இல. 24/ஏ, வோர்ட் பிளேஸ், கொழும்பு 07 எனும் முகவரிக்கு 2025-09-26ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும்.

**தலைவர்,**
**உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம்.**